

சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68 வது நினைவு நாளினை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலத்தில் மாவட்ட செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாஉட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகர கழக செயலாளர் க. தண்டபாணி, ஒன்றிய கழக செயலாளர்கள் கனக. கோவிந்தசாமி, தி.வேல்முருகன் கோட்டேரி.பழனி சுரேஷ், நகர மன்ற தலைவர் டாக்டர்.சங்கவி முருகதாஸ், அரங்க.பாலகிருஷ்ணன் நகர துணை செயலாளர் எஸ். இராமு வழக்கறிஞர்கள் எம்.கே. அருள்குமார் கே. ரவிச்சந்திரன் மற்றும் நகர கழக ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் தூரம் கொண்ட மாபெரும் ரேக்ளா பந்தயம் அணிக்கடவு ஊராட்சி இராமச்சந்திராபுரத்தில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அணிக்கடவு.ச.கிரி வரவேற்புரையில் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் பந்தயத்தை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் கோப்பைகளை வழங்கினர். இதில் குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்கள் சா.ராஜமாணிக்கம், எஸ்.வி.செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.தனசேகர், சி.சியாம் பிரசாத், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வி.ரகுபதி, ஒன்றிய குழு உறுப்பினர் கவிதா கிரி, ஊராட்சி மன்ற தலைவர் அழகம்மாள் கருப்புசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

### கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் - துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

# கருத்தியல் சொற்போர் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் கோவி.செழியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பங்கேற்பு!

தஞ்சை, டிச.7-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கும்ப கோணத்தில் இன்று (07.12.2024-சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் கும்பகோணம் காஞ்சி சங்கரா திருமண மண்டபத்தில் இளம் பேச்சாளர்களை கொண்டு கருத்தியல் சொற்போர் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

கும்பகோணம் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 3வது பகுதிச் செயலாளர் இரா.கல்யாண சுந்தரம் வரவேற்புரையாற்று கிறார்.

மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், எஸ்.இரவிசந்திரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை, மண்டலம் 3ன் தலைவர் ஜெ.மனோகரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராம லிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா, கும்பகோணம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் சி.க.மறைமலை ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு என்ற தலைப்பில் இளம் பேச்சாளர் கூந்தை த.குமரவேலும், மகளிர் முன்னேற்றத்தில் தமிழ்நாடு என்ற தலைப்பில் இளம்பேச்சாளர் திருவாரூர் கனிமொழியும் கருத்தியல் சொற்போர் நடத்துகின்றனர்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், கோ.தாமரைச் செல்வன், கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, தியாக.சுரேஷ்குமார், பி. எஸ்.குமார், என்.நாசர், மிசா.என்.மனோகரன், இர.உதயசந்திரன், மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு. உத்திராபதி, இராம.விஜயன், மாவட்ட கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, ஜெ.நடராஜன், எஸ்.துரைமுருகன், ஜெயலெட்சமி நடராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.அசோக்குமார், எல். இராஜேந்திரன், மருது.நடராஜன், ஜி.கலியமூர்த்தி, இரெ.கருணாநிதி, ரேவதி நடராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.செல்வராஜ், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், மண்டலக்குழு தலைவர்கள் கே.என்.எஸ். ஆசைதம்பி, பாபு இரா.நரசிம்மன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்துக்கொள்ள உள்ளனர்.

முன்னதாக கும்பகோணம் பிரசன்னா தேவி பிரசாத் குழுவினர் வழங்கும், வயலின் ஃபியூசன் இன்னிசைக் கச்சேரி நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி முடிவில் மாநகரக் கழக துணைச் செயலாளர் ப்ரியம் ஜெ.சசிதரன் நன்றியுரையாற்றுகிறார்.



வளவனூர் குடுமியங்குப்பம் புறவழிச்சாலை மேம்பாலத்தில் விபத்துக்குள்ளான புதுச்சேரி ரெயின்போ நகரைச் சேர்ந்த தம்பதியினர் அன்புச் செல்வன் – சரண்யா ஆகியோரை விழுப்புரம் தெற்கு மாவட்டச் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களுக்குத் தேவையான முதலுதவிகளை செய்து உடனடியாக 108 ஆம்புலன்சை தொடர்பு கொண்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து மருத்துவ அதிகாரிகளை தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளை உடனடியாக தொடங்க வேண்டும் என வலியுறுத்தினார். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உடனிருந்தார்.



புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி, அவரது சிலைக்கு மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.



கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட மருத்துவர் அணி மற்றும் வீரப்பன் சத்திரம் பகுதி வட்டக் கழகம் சார்பில் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.விவேக் ஏற்பாட்டில் கிருஷ்ணம் பாளையத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் மற்றும் ரத்ததான முகாமை கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் துவங்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் செல்லப்பொன்னி, க.சின்னையன், ப.க.பழனிசாமி, ஆர்.பொன்னுச்சாமி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி செயலாளர் வி.சி.நடராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ரவி, சரண்யா சங்கமேஸ்வரன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் யுவபாலகுமாரன், தண்டபாணி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ரயில்வே திட்டங்களை நிறைவேற்ற

# நிதி ஒதுக்காமல் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது!

## மக்களவையில் - சி.என்.அண்ணாதுரை பேச்சு!



திருவண்ணாமலை, டிச.7-

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. எம்.பி. சி.என்.அண்ணாதுரை பேசியதாவது:

கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் நாட்டை ரயில்வே துறை முற்றிலுமாக புறக்கணிக்கிறது. தென்னக ரயில்வே பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தில் 71 லட் சம் கோடி வருவாயை ஈட்டி கொடுத்திருக்கிறது. அதில், 2.5 சதவீத நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை திண்டிவனம் புதிய ரயில் பாதை திட்டம் 2006ல் அறிவிக்கப்பட்டு, 2008ல் பணிகள் தொடங்கப்பட்டது.

ஆனால், 2011க்கு பிறகு முற்றிலும் பணிகள் நிறுத் தப்பட்டது. கடந்தாண்டு பட்ஜெட்டில் இத்திட்டத்திற்கு 750 கோடி நிதி ஒதுக்குவதாக அறிவித்தனர். 2024 பட்ஜெட்டில் கோடி தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்படுவதாக அறிவித்தனர். ஆனால், ஒரு ரூபாய் கூட இத்திட் டத்துக்காக செலவி டப்படவில்லை. ஒன்றிய அரசு நிதியை ஒதுக்குவதிலும், திட்டங்களுக்கு அனுமதியை அளிப்பதி லும் தமிழ்நாட்டை புறக்கணிக்கிறது.

திருவண்ணாமலையில் பவுர்ணமிக்கு 10 லட் சம் பக்தர்களும், தீபத் திருவிழாவுக்கு 40 லட்சம் பக்தர்களும் வருகின்றனர். ஆனால், திருவண் ணாமலை

சென்னைக்கு கடந்த 10 ஆண்டுகளாக ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் கூட இயக்கவில்லை. திருவண்ணாமலை, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ரயில் நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் கால தாமதம் ஆகிறது. ரயில்வே துறையில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண் டும். அந்தந்த மாநில இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ரயில்வே வருமானம் மட்டுமின்றி, ஜிஎஸ்டி, வருமான வரி வரி ஆகியவற்றிலும் தமிழ்நாடு முக்கிய பங்களிக்கிறது. எனவே, தமிழ்நாடு திட்டங்களுக்கு நிதியை ஒதுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### அண்ணல் அம்பேத்கர் 68-வது நினைவு நாள்!

# புதுச்சேரியில் தி.மு.க.-வினர் ஊர்வலமாகச் சென்று மரியாதை!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில்

புதுச்சேரி, டிச. 7-

புதுச்சேரி மாநில தி.மு. கழகத்தின் சார்பில் மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் தலைமையில், மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா முன்னிலையில், லப்போர்த் வீதியில் உள்ள மாநில திமுக தலைமை அலுவலகத்தில் இருந்து திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அமைதி ஊர்வலமாகப் புறப்பட்டு சட்டப்பேரவை வளாகம் முன்புள்ள டாக்டர் அம்பேத்கர் திருஉருவச் சிலைக்குச் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பெ. உத்திரவேலு அவர்களின் பிறந்த நாளையொட்டி, அரசு பொதுமருத்துவமனை எதிரில் உள்ள அவரது சிலைக்கு திமுக சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

அதேபோல், வில்லியனூர் தொகுதி திமுக சார்பில் வில்லியனூர் தாலுக்கா அலுவலகம் வாயிலில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமையில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளில், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், ந. தங்கவேலு, எஸ். எஸ். செந்தில்குமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ப.வடிவேல், வெ. சக்திவேல், பி.சா. இளஞ்செழியபாண்டியன், சே. ராதாகிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்றனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் டாக்டர் அம்பேத்கார் நினைவு தினத்தை முன்னிட்டு அவரதுதிருவுருச் சிலைக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,செயற்குழு உறுப்பினர் சீனு சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன், பொருளாளர் ராஜேந்திரன்,நகர துணை செயலாளர் கௌதமன்உள்ளிட்ட திமுக, தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆலோசனைப்படி தலைவாசல் பகுதியில் தொடர் மழையின் காரணமாக வசிஷ்ட நதி கரையோரம் இருக்கும் மக்களை பத்திரமாக மீட்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை தலைவாசல் மத்திய ஒன்றிய செயலாளர் சாத்தாப்பாடி மணி வழங்கினார். அப்போது மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பாலமுருகன்,மாவட்ட பிரதிநிதி தேவேந்திரன்,ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கண்ணுசாமி, இளைஞரணி அமைப்பாளர் நிவாஸ்,தலைவாசல் கிளைக் கழகச் செயலாளர் செந்தில், சாத்தப்பாடி கிளை கழக செயலாளர் கைராசி ராஜா,செல்லையா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதல்படி, கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு கடலூர் மாநகர கழக செயலாளர் கே . எஸ் .ராஜா, தலைமையில், கடலூர் மாநகர மேயர் சுந்தரி ராஜாவால் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது. மாநகர அவை தலைவர் பழனிவேல், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர்.பாலாஜி, வழக்கறிஞர் கேஎஸ்.ஆர்.கார்த்திக், மண்டல குழு தலைவர் பிரசன்னா, இளையராஜா , சங்கீதா, மாமன்ற உறுப்பினர்கள் ஆராமுது, தமிழரசன், லெனின்,கர்ணன்,பகுதி துணை செயலாளர் கார்.வெங்கடேஷன்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரவீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.